பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 06 வெள்ளிக்கிழமை 20.01.2023 கதிர் 73



## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாண மாநகர சபைக்கான புதிய முதல்வர் தெரிவு நேற்று நூலிழையில் சறுக்கியிருக்கின்றது. அப்படிச் செய்யப்பட்டது முறையா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு முதலில், அப்படி நடப்பதற்குக் காரணமானவர்களில் ஒருவரின் ☞2







# அனைத்து தரப்பினருக்கும் கட்டம் கட்டமாகத் தீர்வு



## ஜனாதிபதி ரணில் நேற்று அறிவிப்பு

இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என ஒவ்வொருவருக்கும் தனித்தனி பிரச்சினை இருப்பதன் காரணமாகவே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கில் நாம் அனைவரையும் ஒன்றாக இணைத்துப் பேச்சு நடத்தவில்லை. அவர்களைத் தனித் தனியாக அழைத்துப் பேச்சை முன்னெடுக்கின்றோம். எனவே, பிரச்சினைகளைக் கட்டம் கட்டமாகத் தீர்ப்போம். அப்போதுதான் 75 ஆவது ஆண்டு சுதந்திர தின நிகழ்வின் போது நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழும் நிலை ஏற்படும்

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ☞11

## இலங்கை ஜனநாயக நாடுதானா? உலகம் அவதானிக்க வேண்டும்!

### இப்படி வலியுறுத்தினார் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



இலங்கை ஒரு ஜனநாயக நாடுதானா என்பதை உலகம் அவதானிக்க வேண்டும் என்று இன்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் எதிரணியின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

தற்போது நிறைவேற்றுத்துறை சட்டவாக்கத்துறையில் நேரடியாகத் ☞2

## பணம் செலவிட்டு அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்கும் புதிய சட்டம்

### அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றில் தெரிவிப்பு

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் தேர்தலைக் காலம்தாழ்த்த முடியுமா? முடியாதா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பணம் செலவிட்டு அதிகாரத்துக்கு வருவதைத் தடுப்பதற்கு தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டம் ☞2



## ஜேர்மனியுடன் கைகோர்த்தது வடக்கு தொழிற்றுறை மன்றம்



வடக்கிற்க்கான தொழிற்றுறைகள் மன்றம் ஜேர்மன் தொழிற்றுறைகள் மன்றத்துடன் நேற்றைய தினம் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

அண்மையில், வடக்கில் ஐந்து மாவட்டங்களையும் இணைத்து சமூக நலன்நோக்கில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு தொழிற்றுறைகள் மன்றத்தின் அடுத்தகட்ட நகர்வாக இந்த ஒப்பந்தம் அமையவுள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் உள்ளூர் சிறு கைத்தொழில்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களை இணைத்து அவர்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் வடக்கிற்க்கான தொழிற்றுறைகள் மன்றத்தின் தலைவர் ☞2

### நாடாளுமன்றத்தில் சஜித் நேற்று தெரிவித்தது

## பிரபா - மாத்தையாவைப் பிரிப்பதற்கே பிரேமதாஸ புலிகளுக்கு உதவினாராம்



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் மாத்தையாவைப் பிளவுபட வைக்கவே தனது தந்தையின் காலத்தில் புலிகளுக்குச் சில உதவிகள் செய்யப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் மகனுமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதில் ஒரு கட்டத்தில் தன்னால் பாடசாலைக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பஸ்கள் மற்றும் உதவிகள் தொடர்பில் பட்டியலிட்டார் .

இதன்போது குறுக்கிட்ட அரச தரப்பு பிரதம கொறடாவும் ☞11

## தேர்தல் செலவினங்கள் சட்டமூலம் நிறைவேற்றம்

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் 61மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 97 பேரும், எதிராக 36 பேரும் வாக்களித்தனர்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்படி நேற்றுக் காலை 10.30 முதல் மலை 5.00 மணிவரை விவாதம் நடைபெற்று இறுதியில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலால்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு இழப்பீடு தரவேண்டும்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை முழுமையாக இழப்பீடு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) வலியுறுத்தியுள்ளது. ☞11

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவாரஸியமான கதையை வாசகர்க ளுக்குக் கூறுகின்றேன்.

மாநகர சபையில் உள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்களில் நால்வர் இப்போது அந்தக் கட்சியுடன் இல்லை. அவர்களில் ஒருவர் கட்சியிலிருந்து தள்ளி நிற்பதற்குச் சொல்லப்படும் காரணம்தான் மிகச் சுவாரஸியமானது. அந்த உறுப்பினரின் மகளுக்குத் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. எல்லாம் முற்றாகி இனித் தாலி கட்டுவதுதான் பாக்கி என்கிற நிலையில் திடீரெனத் திருமணம் குழம்பிப் போய்விட்டது. மாப்பிள்ளை வீட்டார் திருமணம் வேண்டாம் என்று கூறி அதனை நிறுத்திவிட்டார்கள்.

பதறிப்போன தந்தை என்ன ஏது என்று காரணத்தைத் தேடினால், நீங்கள் ஈ.பி.டி.பி. கட்சியில் கேட்டுத்தான் மாநகர சபை உறுப்பினர் ஆகினீர்கள் என்று எமக்கு முன்னரே தெரியாது, அந்தக் கட்சியில் சேர்ந்த அரசியல் செய்யும் உங்கள் குடும்பத்தில் சம்பந்தம் வைக்க நாங்கள் தயாரில்லை என்று மாப்பிள்ளை வீட்டார் சொல்லிவிட்டார்கள்.

அவமானத்தால் குறுகிப்போய்விட்ட அவர், இப்போது அந்தக் கறையைத் தீர்க்க மாநகர சபையின் ஆயுட் காலம் முடிவதற்கு முன்னர் எதையாவது செய்து தான் ஈ.பி.டி.பி. ஆள் இல்லை என்று காட்டிவிடவேண்டும் என்று விரும்புகின்றார்.

மாநகர சபையின் நேற்றைய கூட்டத்தை கோரம் இல்லாததாக்கி ஆனோல்ட்டை முதல்வராக விடக்கூடாது என்கிற மணி அணி மற்றும் ஈ.பி.டி.பி. தரப்புக்களின் திட்டத்தை இத்தகைய உறுப்பினர்கள் சிலரின் ஆதரவுடன்தான் வெற்றி கொள்ள முடியும் என்று தமிழ் அரசுத் தரப்பில் திட்டம் தீட்டப்பட்டது. மணி அணிக்கு எதிரான நிலைப்பாடு இருப்பதால் முன்னணி உறுப்பினர்களும் ஆனோல்ட்டுக்கு ஆதரவளிக்காவிட்டாலும் கோரத்திற்குக் கணக்குக்காட்ட தமிழ் அரசுக்கு உதவுவார்கள் என்று கணித்தே - அவர்களுடன் பேசியே - ஆனோல்ட் களமிறங்கினார்.

காலையில் எல்லாம் திட்டமிட்டபடி நன்றாகத்தான் நடந்துகொண்டிருந்தது. தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் 15 பேர் தவிர மேலும் 9 பேருமாகச் சேர்ந்து 24 உறுப்பினர்கள் சபையில் அமர்ந்திருந்தார்கள். 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 23 பேர் இருந்தால் கோரம் இருப்பதாக அர்த்தம். நேற்றுக் காலையில் சபையில் 24 பேர் இருந்தார்கள். அதனால் முதல்வர் தெரிவை நடத்திவிட எல்லா ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஆனோல்ட்டின் பெயர் முன்மொழியப்பட்டது. அதுவரை சபையில் அமர்ந்திருந்த முன்னணி உறுப்பினர்கள் உட்பட நால்வர் எழுந்து தாங்கள் வெளிநடப்புச் செய்வதாகக் கூறிச் சென்றுவிட்டார்கள். அதனால் சபையில் கோரம் இல்லை என்று தெரிவித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரணவநாதன், முதல்வர் தெரிவை ஒத்தி வைத்துவிட்டார். பாவம் ஆனோல்ட். உச்சியிலேயே சனி பகவான் அமர்ந்திருப்பார் போலும் அதுதான் அவரது பெயர் உச்சரிக்கப்பட்டதுமே கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்கிற கதையாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் போட்டியின்றி முதல்வராக ஆனோல்ட் தெரிவு செய்யப்பட்டிருப்பார்.

இப்படி தான் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பை இழந்துபோன ஆனோல்ட் இழக்கக் காரணமான, சபையில் கோரம் இல்லை என்கிற முடிவு சரியானதுதானா என்கிற சட்டச் சிக்கல் ஒன்றுள்ளது. கூட்டத்தில் கோரம் இருக்கின்றது என்று தெரிவித்துத்தான் முதல்வர் தெரிவை நடத்துவதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முன்வந்தார். அப்படியிருக்கும்போது கூட்டத்திலிருந்து நால்வர் இடையில் எழுந்து சென்றதற்காக அந்தக் கூட்டம் கோரம் அற்றுப்போனதாக அறிவித்தது சட்ட ரீதியாகச் சவாலுக்கு உட்படுத்தக்கூடிய விடயம் என்கின்றன சட்ட வட்டாரங்கள். இருந்தாலும் அப்படிச் அந்த முடிவை சட்ட ரீதியாகச் சவாலுக்கு உட்படுத்தும் திட்டம் ஏதும் தமிழ் அரசுக் கட்சியிடம் இல்லை. ஆனாலும் தமது ஆட்சேபனையை எழுத்து மூலம் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

ஆணையாளரின் முடிவைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தப்போய், பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்பதையே காரணமாகக் காட்டி முதல்வர் தெரிவு ஒத்திவைக்கப்பட்டுவிடக்கூடும் என்று அஞ்சுகின்றனர் தமிழ் அரசுக் கட்சியினர். அதனால் அடுத்த கூட்டம் வரை பௌவியமாக இருந்துவிட்டு ஆனானப்பட்ட அந்த 4 உறுப்பினர்களையும் சூதானமாக நடந்துகொள்ள வைத்து ஒருவாறு காரியத்தை ஒப்பேற்றிவிடவேண்டும் என்பதுதான் இப்போதைக்குத் திட்டம். பார்ப்போம் அடுத்த அமர்வின்போது இனியென்ன பூதம் புதிதாய் கிளம்பும் என்பதை.

**- இடிமின்னல் -**

## இலங்கை ஜனநாயக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையிடுகின்றது. நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. நாடாளுமன்றத்தைச் சபாநாயகர் நிர்வகிக்கவில்லை, நிறைவேற்று அதிகாரமே நிர்வகிக்கின்றது. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் அரசு செயற்படுகின்றது. நான் எழுதிய சட்டப் புத்தகங்கள் அனைத்தையும் குப்பைத் தொட்டியில் போடுமாறு பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கவுள்ளேன். இது ஜனநாயக நாடா என்பதை உலகம் அவதானிக்க வேண்டியது அவசியமாகிவிட்டது. என்றார் அவர்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம் நாட்டுக்கு அவசியம் என்பதை ஒருபோதும் மறுக்கவில்லை. தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தல் சட்டம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா, இல்லையா என எதிர்க்கட்சித் தலைவர் பிரதமரிடம் முன்வைத்த கேள்விக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமா? இடைநிறுத்தப்படுமா? என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றல் கடமையில் இருந்து விலகுமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டார். கட்டுப்பணத்தை ஏற்றல் கடமையில் இருந்து விலகுமாறு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை அறிவித்ததாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையில் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை எனப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குத் தடையேற்படும் வகையில் செயற்படுவது 3 வருட கால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை இடைநிறுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துவிட்டது. இது குறித்து வெட்கப்பட வேண்டும்.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதை ஒரு மாதத்துக்குப் பிற்போடுவதாக நீதி அமைச்சர் இருமுறை வாக்குறுதி வழங்கினார். ஆனால், கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சின் பின்னர் அந்த வாக்குறுதிகள் மறக்கப்பட்டன - என்றார்.

## பணம் செலவிட்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குத் தேவை.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

பணம் செலவிட்டு, அதிகாரத்தை கைப்பற்றும் நிலையே இன்று இருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கு இருக்கும் சிறந்த வழியே இந்தச் சட்டமூலம். தங்களுக்குத் தேவையானதை நாட்டுக்குள் செய்து கொள்வதற்காக வெளிநாடுகள் பணம் செலவிட்டு சிலரைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்கின்றன. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டால் இது போன்ற செயற்பாடுகள் தடுக்கப்படும். இதுவொரு முழுமையான சட்டம் இல்லை என்றாலும் அடிப்படையான சட்டம்.

தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்த முடியுமா என்பது எனக்குத் தெரியாது. இது வொரு சிறந்த சட்டம் என்பதால் அனைவரும் இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவளிக்க முன்வரவேண்டும்.

அமெரிக்க போன்ற பலமிக்க நாடுகளில் நடைபெறும் தேர்தல்களிலேயே வெளிநாட்டு தலையீடுகள் இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அப்படியென்றால் இலங்கை போன்ற சிறிய நாட்டில் எவ்வாறான வெளிநாட்டு அழுத்தங்கள் இருக்கும் என்பதைக் கூறவேண்டியதில்லை.


இதேவேளை, சர்வதேச நாடுகளுக்குச் செல்லும்போது நாட்டில் ஏன் இன்னமும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கின்றது என்கிற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எமது அரசு இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சுமார் 200 பேரை விடுதலை செய்திருக்கின்றது - என்றார்.

## ஜேர்மனியுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க.பூரணச்சந்திரன் மற்றும் ஜேர்மன் தொழிற்றுறைகள் மன்றத்தின் சார்பில் தோமஸ் என்பவரும் கலந்துகொண்டனர்.

இந்த ஒப்பந்தம் வடக்கில் உள்ள கைத்தொழில் மற்றும் உள்ளூர் உற்பத்திகளில் மாற்றத்திற்கான வழியாக இருக்கும் என தொழிற்றுறை மன்றத்தினர் தெரிவித்தனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர்
Kalaikkathir

# மாகாணசபைகளின் உயர் அதிகாரிகள் பணம் விரயம் செய்வதாக குற்றச்சாட்டு!

## அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதில் நெருக்கடி நிலை

அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது மாகாண சபைகளின் உயர் அதிகாரிகள் எரிபொருள் கொடுப்பனவு, வீட்டு வாடகை கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுகளைப் பெற்று பணத்தை விரயம் செய்கின்றனர் எனக் கணக்காய்வாளர் திணைக்களம் நிதியமைச்சிற்கு அறிவித்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் ஆறு கணக்காய்வு விசாரணைகளின் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஒன்பது மாகாண சபைகளிலும் ஆளுநர்களின் விருப்பத்துக்கேற்ப கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த வருட ஆரம்பம் வரையில் மாகாண சபை அதிகாரிகளுக்கு வீட்டு வாடகைக் கொடுப்பனவுகள், குழு கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள் என பதினாறு கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சில அதிகாரிகள் எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டு மாகாண சபை வாகனங்களில் கடமைக்கு சென்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.

சுற்றறிக்கை மூலம் அரச அதிகாரிகளுக்கு 180 லீற்றர் கொடுப்பனவு வழங்கப்பட்ட நிலையில் மாகாண சபை அதிகாரிகள் 350 லீற்றர் வரை எரிபொருள் பெற்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

மாகாண சபைகள் கலைக்கப்பட்ட அதேவேளை மாகாண சபைத் தலைவர்கள் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மாகாண சபைத் தவிசாளர்கள் தங்களது வீடுகள் அந்தந்த மாகாண சபை எல்லைக்குள் அமைந்திருந்தாலும் வீட்டு வாடகைக் கொடுப்பனவாக ஐம்பதாயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவாகப் பெற்றுள்ளனர்.

மேல்மாகாண சபையில் மட்டும் உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத பதினான்கு அதிகாரிகள் வீட்டு வாடகை கொடுப்பனவை பெற்றுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. தென் மாகாண சபையின் அதிகாரிகளும் அவ்வாறே செயற்பட்டுள்ளனர் எனக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெற்ற சில அதிகாரிகளின் தனிப்பட்ட வீடுகள் மாகாண சபைகளுக்கு மூன்று நான்கு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இதுதொடர்பில் தணிக்கை விசாரணை அறிக்கைகள், ஆளுநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு ஆளுநர்களுக்கு அதிகாரம் உள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கையின் அடிப்படையில் அமையாத பட்சத்தில் ஆளுநர்களின் விருப்பத்துக்கு அமைய இவ்வாறு கொடுப்பனவுகளை மேற்கொள்வது சட்டவிரோதமானது என கணக்காய்வாளர் நாயகம் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இன்புளுவன்சா ஏ வைரஸ் தாக்கம் அதிகரிக்கலாம் என எச்சரிக்கை!



இன்புளுவன்சா ஏ வைரஸ் இலங்கையில் பரவலாகப் பரவி வருவதாகவும், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்த வைரஸின் பரவல் அதிகரிக்கக் கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பத்தொன்பது வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் இருந்து பெறப்பட்ட சளி பரிசோதனையில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மாதாந்தம் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களில் ஐந்து வீதத்திலிருந்து பத்து வீதத்துக்கு இடைப்பட்டவர்கள் இன்புளுவன்சா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருமல், சளி, மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், இந்த நிலைமைகள் மோசமடைந்தால், மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சமுர்த்திக் கொடுப்பனவுடன் வழங்கப்படும் ஏனைய சலுகைகளை நீக்க நடவடிக்கை!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



சமுர்த்திக் கொடுப்பனவுடன் வழங்கப்படும் ஏனைய சலுகைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், சமுர்த்தி மானியம் தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இல்லாதவர்கள், கஷ்டப்படுபவர்களைக் கவனிக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களைப் பலப்படுத்த வேண்டும், அவர்கள் சுயமாக எழுச்சி பெறும் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரி வித்துள்ளார்.

அவ்வாறு இன்றி அரசியல் பொறி முறையாக சமுர்த்தியை வைத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்தி தொடர்பான ஏனைய விடயங்களை நீக்குவதற்காக ஜனாதிபதியிடம் சென்று பேசிய போது, அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்குமாறு கூறினார்.

சமுர்த்தி கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்க வேண்டும். தகுதியானவர்களுக்கு சமுர்த்தி வழங்க வேண்டும்.

இன்றும் சமுர்த்தி கிடைக்காதவர்கள், எனினும் வறுமையில் உள்ளவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.

ஆனால் ஏனைய சலுகைகளை அகற்றுவது தொடர்பில் யார் என்னைத் திட்டினாலும் பின்வாங்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பல வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு!

நாடளாவிய ரீதியில் உள்ள பல வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகள் இல்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சில கிராமிய மற்றும் கிராமப்புற வைத்தியசாலைகளில் காணப்படும் மருந்துகள் பற்றாக்குறையால் மக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வெளியில் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை சந்தித்த தேர்தல்கள் ஆணைக் குழு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எரிபொருள் அளவை அதிகரிக்குமாறு கோரிக்கைகள் கிடைத்துள்ள போதிலும், அதற்கான அனுமதியை வழங்க முடியாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் – தற்போது எமக்கு உள்ள மிகப்பெரிய பிரச்சினை எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் தேவைப்படுவதேயாகும்.

டொலர்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கையின் பணம் தேவைப்படுகின்றது. எரிபொருள் கொள்வனவுக்கு எமக்குத் தேவையான பணம் எங்களிடம் இல்லை.

அத்துடன் எண்ணெய் தேவை சுமார் 40 வீதம் குறைந்துள்ளது. அந்தக் கோரிக்கைக்கு ஏற்ற பணத்தை நாங்கள் வழங்குகிறோம். இதை மீண்டும் அதிகப்படுத்தால் பணம் தேவை. – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று முதல் விடுமுறை அறிவிப்பு!



நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று (வெள்ளிக்கிழமை) விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 2022 பாடசாலை கல்வியாண்டின் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைந்து பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை க.பொ.த உயர்தரப் பரீட்சைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புதிய சட்டம் தவறாக பயன்படுத்தப்படக்கூடாது

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டுவிட்டது. நேற்று நடந்த ஒருநாள் விவாதத்தின் பின்னர் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி இந்தச் சட்டம்வரை நிறைவேற்றப்பட்டுள்ளது. சபாநாயகர் சட்டத்தின் இறுதி வரைவில் கையெழுத்திட்டதும் அது சட்டமாகும்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழான விருப்பு வாக்கு முறையினால் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் செலவிடும் தொகை மிகப் பெரியதாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி வாககுகளைப் பெறுவதற்காகப் பணத்தை இலஞ்சமாகக் கொடுக்கக்கூடிய நிலையும் ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு தேர்தலுக்கு அளவு கணக்கற்ற பணம் செலவிடப்படுவது, பணம் கொட்டிக்கிடப்பவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடமுடியும் என்கிற நிலையை உருவாக்கி மக்களாட்சித் தத்துவத்தின் மகிமையையே சீரழித்துவிடும்.

தேர்தலுக்காகச் செலவிடப்படும் பணத்திற்கு கணக்குக் காட்டப்படுவதன் அவசியத்தையும் செலவிடப்படக்கூடிய பணத் தொகைக்கு உச்ச வரம்பு ஒன்றை நிர்ணயிப்பதற்கான வசதிகளையும் புதிய சட்டம் கொண்டிருக்கிறது. அதனால் இது பயனுள்ள ஒரு சட்டம் என்பதில் ஐயமில்லை.

இந்தச் சட்டத்தைப் பற்றி நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த அயலுறவுத்துறை அமைச்சரும் சட்டத்தரணியுமான அலி சப்ரி, பணம் செலவிட்டு அதிகாரத்துக்கு வருவதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் அவசியம் என்று வலியுறுத்தினார். அந்த வகையில் உருவாக்கப்பட்ட நோக்கத்துக்காக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டால் நன்று. அதைவிடுத்து, எதிர்க் கட்சிகள் அச்சப்படுவது போன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான பின்கதவு உத்தியாக ஆட்சியாளர்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது.

மக்களாட்சியின் அடிப்படையே தேர்தல்கள்தான். அவற்றைத் தடுத்து நிறுத்துவது மக்களாட்சிக்கு (ஜனநாயகத்துக்கு) அடிக்கப்படும் சாவு மணியாகவே முடியும். பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் தேர்தலை ஒத்திவைக்க முற்படுவதும் தேர்தலுக்காக அரசு நிதியை செலவாகப் பார்ப்பதும் தவறானது. மக்களாட்சியை பேணிப் பாதுகாப்பதற்கான அடிப்படையே அது. எனவே புதிய சட்டத்தைப் பயன்படுத்தி தேர்தலைப் பிற்போட சதி வலை பின்னாது, உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்தவேண்டும்.

# நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்கள் அரசில் தொடர்ந்துமிருக்க வெட்கம் இல்லையா?

## கிரியெல்ல - அலி சப்ரி கடும் வாக்குவாதம்



கொழும்பு, ஜன. 20

அரசமைப்பின் 21 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்து நாட்டை வங்குரோத்து அடையச்செய்துவிட்டு தற்போது இணைந்து செயற்பட அழைப்பு விடுக்கின்றனர்.

இவர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தில் தொங்கிக்கொண்டிருப்பதற்கு வெட்கம் இல்லையா எனகேள்வி கேட்ட லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., அமைச்சர் அலிசப்ரியை பார்த்து நீங்கள் சட்டத்தரணியா எனவும் சபையில் கேட்டதால், அமைச்சர் அலிசப்ரிக்கும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பிக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ, அரசாங்கம் அரசமைப்பின் 21 ஆம் திருத்தத்தை யாருடனும் கலந்துரையாடாமல் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொண்டனர்.

அரசாங்கத்துக்கு இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்ற தைரியத்திலேயே 21ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வழக்கு விசாரணைகளை மேற்கொண்டுவந்த சட்டத்தரணிகள் குழுவொன்றே 21 ஆம் திருத்தத்தை மேற்கொண்டனர். அதனையே அமைச்சர் அலிசப்ரி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தார்.

இந்தத் திருத்தத்துக்கு நாங்கள் 25 திருத்தங்களைச் சமர்ப்பித்திருந்தோம். ஒன்றையேனும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது இணைந்து செயற்பட முன்வருவேண்டும் என அமைச்சர் அலிசப்ரி தெரிவிக்கின்றார். இவ்வாறு தெரிவிக்க இவர்களுக்கு வெட்கம் இல்லையா? இவர் ஒரு சட்டத்தரணியா எனக் கேட்டார்.

இதன்போது சபையில் இருந்த அமைச்சர் அலிசப்ரி எழுந்து, நான் சட்டத்தரணி என்பது அனைவருக்கும் தெரியும். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சார்பாகவும் நீதிமன்றம் சென்றிருக்கிறேன்.

ஆனால் நீங்கள் ஒரு நாளாவது நீதிமன்றத்துக்கு சென்று வழக்குகளில் ஈடுபட்டிருக்கின்றீர்களா? அதனால் என்னை விமர்சிக்க உங்களுக்குத் தகுதி இல்லை. – என்றார்.

தொடர்ந்து லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில், நாடாளுமன்றக் குழுக்களுக்கு சமர்ப்பிக்காமலே 21 ஆம் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்துக்கொண்டனர்.

21ஆம் திருத்தம் சரி என்றால் ஏன் 3 வருடங்களில் மாற்றினீர்கள். 21 மூலம் அரச நிர்வாகம், அரச நிறுவனங்களை ஜனாதிபதிக்கு கீழ் கொண்டுவந்து செயற்பட்டனர். அதனால் ஒட்டுமொத்த அரச நிர்வாகத்தையும் செயலிழக்கச்செய்து, நாட்டை வங்குரோத்து அடையச்செய்தனர்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட அமைச்சர் அலிசப்ரி, 21ஆம் திருத்தம் முறையாகவே நாடாளுமன்றத்துக்குவ் சமர்ப்பித்தோம். பொய்க் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டாம். – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல, தேர்தல் நடத்த பணம் இல்லை என அரச சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்திருக்கின்றனர். நாட்டை வங்குரோத்து அடையச்செய்து இன்னும் அரசாங்கத்தில் இருப்பதற்கு வெட்கம் இல்லையா? அட்டை போன்று அரசாங்கத்தில் தொங்கிக்கொண்டிருக்காமல் இராஜினாமா செய்யுங்கள்.

அத்துடன் தேர்தல் ஒன்றுக்கு அறிவிப்பு செய்துள்ள நிலையில் இந்த சட்டமூலத்தைக் கொண்டுவந்திருப்பது தேர்தலை பிற்போடுவதற்காகும். தேர்தலைப் பிற்போட்டால் நீதிமன்றம் செல்வோம். அதேநேரம் தேர்தலை பிற்போடுவதன் மூலம் நாட்டில் பாரிய பிளவு ஏற்படும் என்பதை அரசாங்கத்துக்கு எச்சரிக் கையாகத் தெரிவிக்கின்றேன். – என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக கட்டுப்பணத்தை செலுத்தியது ஈ.பி.டி.பி!

## வவுனியாவில் திலீபன் தலைமையில்



வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஈழமக்கள் ஜனநாயக கட்சி கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் தமது கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் –

ஈழமக்கள் ஜனநாயக கட்சி வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியிருக்கின்றோம். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வவுனியா நகரசபை மற்றும் தெற்கு தமிழ் பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிட்டிருந்தோம்.

இம் முறை மக்களுக்கு ஆற்றிய சேவையின் அடிப்படையில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணங்களையும் செலுத்தியுள்ளோம் – எனவும் குறிப்பிட்டிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் ரிஷாத்தின் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை மார்ச் 17இல்!



வில்பத்து பாதுகாப்பு வனப்பகுதியில் காடுகளை அழித்தமை தொடர்பான மனு தொடர்பில் தமக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறுகோரி முன்னாள் அமைச்சர் ரிஷாத்பதியுதீன் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த மேன்முறையீட்டு மனு நேற்று (வியாழக்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கல்லாறு மற்றும் மறிச்சிக்கட்டு பிரதேசங்களில் காடுகள் வெட்டப்பட்டதால் சுற்றுச்சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதாக சுற்றாடல் நீதி மையம் மேன் முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை சமர்ப் பித்திருந்தது. 2020 ஆம் ஆண்டு, இந்த ரிட் மனுவின் தீர்ப்பை அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வன அழிவு இடம்பெற்ற பகுதிகளில் தனது தனிப்பட்ட செலவில் மரங் களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ரிஷாத் பதியுதீனுக்கு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தராசு சின்னத்தில் களமிறங்குவதாக மலையக அரசியல் அரங்கம் அறிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தராசு சின்னத்தில் மலையக அரசியல் அரங்கம் களமிறங்கவுள்ளதாக அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

எண்பதாண்டு காலமாக உள்ளூராட்சியில் நீதி மறுக்கப்பட்டிருந்த மலையகப் பெருந்தோட்டத்துறை மக்களுக்கு பிரதேசசபைச் சட்டத் திருத்தின் ஊடாக வென்று எடுத்த நீதியை நிலைநாட்டவும் நுவரெலியா மாவட்டத்தில் வென்றெடுத்த புதிய பிரதேச சபைகளிலாவது திருத்தப் பட்ட பிரதேச சபைச் சட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் மக்களுக்கு நீதி வேண்டி தராசு சின்னத்தில் போட்டியிட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



## ஏ.எல். பரீட்சையின்போது மின் சாதனங்களுக்கு தடை!

### மீறினால் 5 ஆண்டுகளுக்குத் தண்டனை

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி முதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் உயர்தரப் பரீட்சையின்போது எந்தவொரு இலத்திரனியல் சாதனங்களையும் கொண்டு செல்வதோ அல்லது வைத்திருக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகளை மீறினால் ஐந்தாண்டு காலத்துக்கு உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடை விதிக்கப்படும் என பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை சட்டத்தின்படி, கைத் தொலைபேசிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புளூருத் சாதனங்கள் போன்ற இலத்திரனியல் சாதனங்களை கொண்டு வர பரீட்சார்த்திகளுக்கு அனுமதி இல்லை.

கொண்டு வர அல்லது பரீட்சார்த்திகளின் வசம் வைத்திருக்க அனுமதி இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய சாதனங்களை பரீட்சார்த்திகள் சென்றடையக் கூடிய அல்லது அணுகக்கூடிய இடங்களில் வைத்திருப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## யானைகளின் வருகையால் விவசாய செய்கை பாதிப்பு!

### விசுவமடு மேற்கு பகுதியில்

விசுவமடு மேற்கு பகுதியில் நெற் கதிர்களை யானைகள் தொடர்ச்சியாக மேய்ந்து வருவதால் விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுமார் 450 ஏக்கரில் பெரும் போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் 20 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 நாள்களுக்கு மேலாக 5 தொடக்கம் 6 காட்டு யானைகள் தொடர்ச்சியாக மாலை வேளைகளில் வருகை தந்து அதிகாலை வரை செய்கையை மேய்ந்து வருகின்றன.

குறித்த காட்டு யானைகளை துரத்துவதற்கு விவசாயிகள் பெரிதும் சிமப்படுகின்றனர் எனவும், பெரல் தகரங்களை தட்டியும், தீ மூட்டியும் யானைகளை விரட்டி வருகின்றனர் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை - அமெ. நாடுகளிடையே கூட்டு படைப் பயிற்சி தொடக்கம்




அமெரிக்க கடற்படை மற்றும் மரைன் கொப் படை அணி என்பன இலங்கை கடற்படை மற்றும் இலங்கை வான் படை என்பவற்றுடன் இணைந்து, நேற்று முதல் ஜனவரி 26ஆம் திகதி வரை கூட்டுப் படைப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. தயார் நிலைப் பயிற்சி வகையைச் சேர்ந்த இந்தக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகள் கொழும்பில் தொடங்கின.

கொழும்பு கரையோரத்திலும் திருகோணமலை மற்றும் முள்ளிக்குளம் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை கடற்படைத் தளங்களிலும் இந்தப் பயிற்சி நடைபெறும்.

கடல்சார் பயிற்சிகள் லட்சத்தீவுக் கடலில் நடைபெறும். இவ்வருட பயிற்சியானது ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை ஆகியவற்றின் பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் அமெரிக்க நாசகாரி தாக்குதல் அணி 7 இன் பிரதி கொமடோர் கப்டன் சீன் லூயிஸ் ஆகியோரது பங்கேற்புடன் பயிற்சிகள் தொடங்கப்பட்டன.

இந்தப்பயிற்சியானது யோசனைகள் மற்றும் உத்திகளை பரிமாறிக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என லூயிஸ் கூறினார்.

நாங்கள் கடலிலும் துறைமுகத்திலும் இணைந்து செயற்படும் திறன்களை பயிற்சி செய்வதுடன் எங்களது தனிநபர்களுக்கிடையிலான உறவுகளையும் வலுப்படுத்துவோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

# காணாமற்போனோருக்கான அலுவலகம் விரைவில் இழுத்து மூடப்படுமா? - சங்கம் கேள்வி

நல்லாட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்படுமா என்று கேள்வி எழுப்பியுள்ளனர் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கம் உறுப்பினர்கள்.

“இந்த அலுவலகத்தின் ஊடாக தற்போதுவரை எமக்கு உரியவாறான நீதி வழங்கப்படவில்லை.எனவே அவ்வலுவலகத்தின்மீது நாம் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்திருக்கின்றோம். இன்னும் சில நாட்களில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகமும் காணாமல்போகுமா என்று தெரியவில்லை” என அவர்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலும் தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (மக்கள் விடுதலை முன்னணி) எழுச்சியின்போது இடம்பெற்ற வலிந்துகாணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை உள்ளடக்கி கொழும்பைத் தளமாகக்கொண்டியங்கிவரும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தினால் நேற்று வியாழக்கிழமை சமூக மற்றும் சமய நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் அடையப்படாமை மற்றும் ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்ட இழப்பீடு மற்றும் நட்டஈட்டுத் தொகை என்பன பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படாமை ஆகிய விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்கள், கடந்த 1989 - 1990 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்களால் எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

மேலும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் வெறும் கண்துடைப்பு முயற்சியாக மாத்திரமே இருப்பதாகக் குறிப்பிட்ட அவர்கள், வட - கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தின் பேச்சை நம்பி படையினரிடம் சரணடைந்த பெரும் எண்ணிக்கையானோருக்கு என்ன நேர்ந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டத்தின் நியாயத்தன்மை தொடர்பிலும் சுட்டிக் காட்டினர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வெண்ணெய் திரண்டு வரும்போது ........



என்.சத்தியமூர்த்தி

## அக்க ரை றை அலசல்



ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனை கடித்த கதையாக, தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பிலும், பரந்துபட்ட தமிழர் அரசியல் பரப்பிலும், யார் அல்லது யார் – யார் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் என்ற அடிப்படைக் கேள்வி எழுந்துள்ளது. சரியோ, தவறோ, தமிழர் பிரதிநிதிகள் என்று கூட்டமைப்பை அரசும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அதில் தற்போது தோன்றியுள்ள பிளவு, அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தும் என்பதில் மறு கருத்து இருக்க முடியாது. அதைவிட முக்கியமாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே துவங்கியுள்ள அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் அடுத்த கட்டத்திற்குப்போவது குறித்த புதிய குழப்பங்களும் தோன்றியுள்ளன, என்பதே உண்மை.

கூட்டமைப்பு பிளவுபடாமலே, தற்போதைய அரசுடனான பேச்சுவார்த்தைகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், நான்கு நாட்கள் பேச்சுவார்த்தை என்று துவங்கிய கடந்த சுற்று, அரை குறையாக, முதல் நாளிலேயே முடிவுற்றது. தங்களது முன்நிபந்தனைகள் குறித்து அரசு சரியாக பதிலளிக்கவில்லை என்பதே கூட்டமைப்பின் குற்றச்சாட்டு. இன்னும் சொல்லப்போனால், இதே கோரிக்கைகள், இனப்போர் முடிந்த காலம் தொட்டே முன்வைக்கப்பட்டு, அரசினால் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, இந்த முறை பேச்சுவார்த்தை உடைந்தபோது, இன்று போய், நாளை வா, என்று இராமாயண கதை பாணியில், கூட்டமைப்பு, அரசிடம் கூறியதை தமிழ் சமூகம் ரசித்தது. அதாவது, தமிழர் தரப்பு முன்வைத்து முன்நிபந்தனைகள் குறித்து முடிவெடுக்க அரசிற்கு ஒரு வார அவகாசம் தேவை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, அவ்வாறே ஆகட்டும் என்று கூட்டமைப்பு அதனை ஆசிர்வதித்து அனுப்பியது. பேச்சுவார்த்தையை மீள்த் துவங்குவதும் துவங்காததும் அரசின் முடிவுகள் குறித்த விடயம். அது குறித்து பழிச்சொல் ஏதாவது விழுந்தால், அது அரசினையே சாரும்.

முன்நிபந்தனைகள் குறித்து அரசின் முடிவுகள் தெரியும் வரை, பேச்சுவார்த்தை திகதிகள் மாற்றி வைக்கப்படும் என்று கூட்டமைப்பு சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்தார். அதாவது, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் காணி ஆகியவை குறித்து தமிழர் தரப்பின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுவதுவரை, பேச்சுவார்த்தைகளுக்கு எந்த அர்த்தமும் இருக்காது என்று கூட்டமைப்பு கருதியது, ஒரு விதத்தில் அது சரியான முடிவே.

என்ன, அவ்வாறு அரசு முன்வைக்கும் முடிவுகளை, ஏற்றுக்கொள்வதும், மாற்று மாறு கோருவதும்கூட கூட்டமைப்பின் உரிமையும் கடமையும்கூட. அவ்வாறானால், நாட்டின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வுத்திட்டத்தை, அறிவிக்கும் ஜனாதிபதி ரணில் அறிவிப்பை நிறைவேற்றும் அல்லது நிறைவேற்றிக்கொள்ளும் கடமை, அரசையே சார்ந்ததாகும் அதற்காக, தமிழர் தரப்பில் யாரும் தங்களது தூக்கத்தை கெடுத்துக்கொள்ளப் போவதில்லை, என்பதே கூட்டமைப்பு அறிவித்தலின் சாரம்.

### ஒருதலைபட்ச முடிவு

ஆனால், நடந்தது என்ன? அரசிற்கு அளித்த ஒரு வார கால நேரத்தில், கூட்டமைப்பே உடைந்துவிட்டது. நடைபெறுமா, இல்லையா என்று இன்னமும் கூற முடியாத, நாடு தழுவிய உள்ளாட்சி தேர்தல்களில், கூட்டமைப்பின் மூன்று உறுப்பு கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட்டால், பிற கட்சிகளோ, சுயேச்சைகளோ, உறுப்பினர்களோ தேர்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறையும். அதன் காரணமாகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில், அவர்களுடைய ஆதிக்கமும் தலைமைத்துவமும் குறையும் வாய்ப்புள்ளது.

இதுதான் கூட்டமைப்பின் முக்கிய அலகு கட்சியான தமிழரசின் ஒருமித்த கருத்து. அதுவே, ஒருதலைபட்சமான முடிவாகவும் ஆகியது. அதன் காரணமாகவே, தேர்தல் அரசியலின் அனாதைகளாக ஆக்கப்பட்ட, ரெலோ, புளொட் ஆகிய மற்ற இரு உறுப்பு கட்சிகளும், தாங்களே தற்போதைய கூட்டமைப்பு, என்று தங்கள் பங்கிற்கு, ஒருதலைபட்சமாக அறிவித்தது.

முன்பு, கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த இந்த இரு கட்சிகளும், அவர்களை அணுகிய முன்னாள் உறுப்பு கட்சிகளையும், தனி நபர்களையும் சேர்த்துக்கொள்ள பேச்சுவார்த்தைகளை துவங்கியது. இதில், தனி நபர்கள் என்ற பட்டியலில், தற்போது சின்னத்துடன் தனி கட்சி நடத்திவரும் விக்னேஸ்வரனும் அடங்குவார். கூட்டமைப்பில் அவர் பங்குபெற்றிருந்து வடக்கு மாகாணத்தின் முதல்வராக இருந்த காலத்தில், தான், எந்த உறுப்புகட்சியிலும் சேராமல் கூட்டமைப்பில் நேரடியாகவே தன்னை இணைத்துக்கொண்டதாக அவர் கூறிக்கொண்டிருந்தார்.

அவ்வாறு, விக்னேஸ்வரன் கூறிக்கொள்ளுவதை எதிர்ப்பதற்கு, கூட்டமைப்பிற்கு எந்தவித சட்டரீதியான முகாந்திரமும் கிடையாது. அதனை தனி கட்சியாக பதிவு செய்து, அதற்கென பொதுவான ஒரு தேர்தல் சின்னத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை கன காலமாக, கூட்டமைப்பு எதிர்த்து வந்திருக்கிறது. இந்த முறையும் அவ்வாறே செய்தது.

காரணம், தற்போது தனி கட்சிகளாக அறியப்பட்டாலும், ரெலோ மற்றும் ப்ளொட் ஆகிய இரு கட்சிகளும், இதுவரை, தமிழரசின் வீடு சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிட்டு, வென்றிருக்கிறார்கள். இதுவே, கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்ஃ. கட்சியின் நிலைமையும்கூட. இப்போது, அந்தக் கட்சியும்கூட, தமிழரசு இல்லாத கூட்டமைப்பில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டுள்ளது.

### துவங்கும் முன்னரே

இதில்தான், தமிழ் சமூகத்திற்கான பிரச்சினையே. முதலில் தமிழரசே அறுத்துக்கொண்டு ஓடியது என்றே வைத்துக் கொள்வோம். பின்னர், தோன்றுவதாக இருந்த புதிய கூட்டமைப்பு துவங்கும் முன்னரே உடைந்தது. முதல் சுற்று பேச்சுவார்த்தைகளுக்காக கூடிய அவர்கள், யார் தலைமை, யார் சின்னம், என்ற விடயங்களில் தோன்றிய கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிளவுண்டனர்.



அவ்வாறு உடைத்துக்கொண்டு சென்றவர், விக்னேஸ்வரன்தான். முன்னாள் போராளிகளை தனியொரு கட்சியாக புதிய கூட்டமைப்பில் இணைத்துக்கொள்வது குறித்து கொள்கை ரீதியாக அவருக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தன. தன்னை மிதவாதப் போராளி, அல்லது வாய்சொல் வீரர் என்று அறிய விழையும் அவர்தான், புதிய கூட்டமைப்பில் வெளியாள் எனலாம். மற்றபடி, புதியவர்களும் பழையவர்களும் இணைந்த அந்த கூட்டணி முன்னாள் போராளிகளின் அமைப்பு என்றே கூற வேண்டும்.

ஆனால், விக்னேஸ்வரன் உடைந்து செல்வதற்கு, அவரது தலைமைத்துவ ஆசையும், அவர் தனது தமிழ் மக்கள் கூட்டமைப்பிற்கு புதிதாக கிடைத்துள்ள மான் சின்னத்தில் தேர்தலை சந்திக்க வேண்டும் என்ற ஆவலும்தான், முக்கிய காரணம். இதில், அவரது முதல் ஆசையில் நியாயம் இல்லை என்றாலும், சின்னம் விடயத்தில் அவரது எதிர்பார்ப்பை யாரும் குறை கூறிவிடமுடியாது. அதற்காக, தமிழரசின் அண்ணன் முறையிலான அடாவடியை, புதிய சின்னத்தின் கீழ், புதிய தலைமையின் கீழ், பிற உறுப்பு கட்சிகள் தொடர வேண்டும் என்றும் யாரும் பொருள் கொள்ளமுடியாது.

எது எப்படியானாலும், கடந்த ஒரு வருடமாகவே, ஒரிஜினல் கூட்டமைப்பின் இணை தலைவர் என்று தன்னைதானே அறிவித்துக்கொண்டு வரும் ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், புதிய கூட்டணியின் தலைமைத்துவத்தை,

விக்னேஸ்வரனுக்கோ, பிறிதொருவருக்கோ, தங்க தாம்பாளத்தில் வைத்து அளிப்பார் என்று எதிர்பார்த்திருக்கக் கூடாது. இதுவே, புதிய கூட்டமைப்பு சேர்ந்து போட்டியிட விரும்பும் குத்து விளக்கு சின்னத்திற்கும் பொருந்தும்.

### பதிமூன்றும் அப்பாலும்

இது ஒரு புறமிருக்க, தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தன்று, யாழ்பாணத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில், அடுத்து வரும் காலங்களில் பதிமூன்றாவது அரசியலமைப்பு சட்டதிருத்தத்தின் அடிப்படையிலான தமிழருக்கான அரசியல் தீர்வு, படிப்படியாக ஆனால் முழுமையாகச் செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார். இவ்வாறான ஒரு தீர்வு குறித்தே, ஒரிஜினல் கூட்டமைப்பின் பேச்சாளராகச் சுமந்திரனும் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

அதாவது, ரணில் அரசின் தற்போதைய ஆட்சிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதிமூன்றாவது திருத்தத்தில் கூறப்பட்டு, மத்தியில் ஆண்டு வந்திருக்கும்; அடுத்தடுத்த அரசுகளால் நிறுவப்பட்ட தேசிய பள்ளிகளும் தேசிய மருத்துவமனைகளும், மாகாண அரசின் கீழ் கொண்டு வரப்படும். என்றாலும், தமிழர் தரப்பு மிக முக்கியமாகக் கருதி, பதிமூன்றில் சேர்க்கப்பட்டுள்ள, பொலிஸ் அதிகாரம் குறித்து, ரணில் எந்தவித கருத்தையோ முடி வையோ அறிவிக்கவில்லை என்பதும் நினைவில் கூரப்படவேண்டிய விடயம்.

(10 பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# ஆலய மணி ஓசை



பாடசாலைகளில் மணியடித்தால் அதன் ஆரம்பம் அல்லது முடிவு புகையிரத நிலையத்தில் மணியடித்தால் அதன் வருகை அல்லது புறப்பாடு.சிறைச் சாலையில் மணியடித்தால் உணவு.

கோயில்களில் மனியடிப்பதற்கு பல்வேறு. அகவயமான காரணிகளும், புறவயமான காரணிகளும் பரந்துஉள்ளஎன்றுசைவஆகமங்கள்இயம்புகின்றன.


எமது ஆலயங்களில் பல்வேறு மணிகள் உபயோகத்தில்உள்ளன. கைமணி, எறிமணி, தூபமணி, கொத்துமணி கண்டா மணி என்பன அவற்றுட் சில. இவற்றுள் கண்டா மணியே கோயிலையும் சமூகத்தையும் ஒருசேர இணைக்கும் சமூகவியற் கருவியாகப் போற்றப் படுகின்றது.ஆலயத்தில் பூசை வழிபாடுகள் போன்றன நடைபெறுவதையும் , மற்றும் நேரத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்துவது கண்டா மணியாகும். பூசையின் போது குருக்கள் இடது கையில் பிடித்து ஒலிப்பது கைமணியாகும்.அம்மணியின் கைப்பிடி உச்சியில், சிவன் மற்றும் அம்பாள் ஆலயங்களாயின் நந்தியும்,பெருமாள் ஆலயமாயின் கருடன் அல்லது அனுமானும்,முருகன் ஆலயங்களில் மயிலும் அமைவதுண்டு.

மணி ஓசையால் எதிர்மறைச் சக்திகள் விரட்டப் பட்டு மனிதனுடைய மனதுக்கும் உடலுக்கும் நேர்மறைச் சக்திகள் அதிகரிக்கப்படுகின்றது.மனிதனுக்குத் துன்பம் தரும் துற தேவதைகள் விரட்டப்படுகின்றன் என்று பெரியோர்கள் கூறுவார். பூசையின்போது மணியை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக ஆக மார்த்தம்,துதேவானாம் எனும் மந்திரத்தை சொல்வார்கள்.தீய சக்திகள் விலகி இறை சாந்நித்யம் பெருகட்டும் என்பது அதன் பொருள்.

பூசையின்போது மனியடிப்பதில்உயர்வான உளவியற் காரணியும் தொழிற்பட்டு மனித நடத்தையினை தீர்மானிக்கின்றன. மனித மனம் ஒரு குரங்கு என்பர். அது அங்கும் இங்கும் அலை பாய்ந்து திரிந்த வண்ணமிருக்கும். அந்த அலைபாயும் மனதை ஒரு சில நேரமாவது கட்டுப்படுத்தி இறைவன்பால் ஒன்றிணைய வைப்பதற்கும் மணி ஓசை உதவுகின்றது. தீபாராதனை நடைபெறும் போது எழுப்பப்படும் மணியோசை ஆலயத்துள் அனாவசிய பேச்சுக்களைத் தவிர்த்து இறைவன்பால் எமது சிந்தனையை செலுத்துவதற்கும் உதவி நிற்கும். எமது உள்ளத்தை இறைவன்பால் குவித்து எமது சிந்தனையை ஒருமுகப்படுத்திப் பிரார்த்தனை செய்வதற்கும் மணி ஓசை உதவுகின்றத என்பவத்தையும் அனுபவத்தால் தெரிந்து கொள்வோம்.

மேலும் கோயில் மணி ஓசை கேட்பதால் மூளையின் செயற்றிறன் மேலோங்குகின்றது. மூளையின் வலது மற்றும் இடது பக்கங்கள் சமநிலைப்படுகின்றன என்ற அறிவியல் கருத்தையும் உள்வாங்கி மகிழ்வோம்.

**நாதன் குருக்கள்**
**அவுஸ்திரேலியா**



# வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்

‘வீரம் விளைவித்த வித்தகன் என வித்திகள் விளைத்த வெற்றித்தமிழ் மண்ணின் சொத்தாய் வீர முழக்கமிட’ எனக்கு கிடைத்த சந்தர்பத்தில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். விரைந்து கிடக்கும் மண்ணின் பிரபஞ்சத்தில் செறிந்து கிடக்கும் வாசிப்பு துணிந்து மேன்மையடைகின்றது வரவேற்கதக்க விடயமாகும். அந்தவகையில் வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற தலைப்பில் சிறிய கருத்தொன்றை முன்வைக்கின்றேன்.

‘அரிது அரிது மனிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கி பிறத்தல் அரிது’ என்றார் ஔவையார். அரிய மானிட பிறவியை எடுத்த நாம் வாசிப்பு பழக்கத்தை கடைப்பிடிப்பது எமது தலையாய கடமையாகும். வாசிப்பானது எமது உயிர் போல உடல் முழுவதும் காணப்படல் வேண்டும். எமக்கு வாசிப்பு இல்லையெனில் எமது மனதில் இருள் படிந்துவிடும்.

பழகும் நண்பர்கள் மாறிடலாம். படிக்கும் நூல்கள் மாறிடுமோ, ‘பழக பழக பக்குவப்படுத்துமாம் சிறந்த நூல்கள்’ என்று பாடினான் மகாகவிஞர். நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள். வாசிப்பு இல்லையெனில் கண் இருந்தும் குருடனாகவே கருதப்படுவான். அவர்கள் சமூதாயத்தில் மதிக்கப்படமாட்டார்கள். ‘கண்டோர்க்கும் கண்அளவு கற்றோர்க்கு உலகளவு’ என்பது பழமொழியாகும். வாசிப்பு இல்லாதவர்க்கு அறிவு பாழ். மனித வாழ்வே பாழ் என்பது எனது புதுமொழியாகும்.

தேன் இருக்கும் இடத்தை தேடிச் செல்லும் வண்டு போல சீனி உள்ள இடத்தை தேடி செல்லும் எறும்பு போல நல்ல நூல்கள் இருக்கும் இடத்தை நாமும் தேடிச்செல்ல வேண்டும். வாசிப்பு என்பது ஓர் அற்புதம். பழக பழக பாலும் புளிக்கும் என்பது போல வாசிக்க வாசிக்க ஆற்றல் அதிகமாகும். அதுமட்டுமல்ல அறிவு வளரும். அறிவு வளர்தால் உயர்வடையலாம். உயர்வடைந்தால் எதிர்கால சமூதாயம் எம்மை மதிக்கும். அறிவை வளர்க்க வேண்டும் என்றால் நல்ல நூல்களையே வாசிக்க வேண்டும்.

‘கனியிருக்க காய் கவர்ந்தற்று’ என்றார் வள்ளுவர். நல்ல நூல்கள் இருக்கும் போது அல்லாத நூலை ஏன் வாசிக்க வேண்டும்.

‘ஆளில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது போல வாசிப்பு இல்லாத மனிதருக்கு உயர்வு இல்லாமால் போய்விடும். ஒருவர் ஒரு விடயத்தை கற்கும் போது அவரின் கற்றலுக்கு எல்லை இல்லை. அடிமைகளின் சூரியன் என்னும் ஆபிரிகாம் லிங்கன் வாசிப்பில் அதிக ஆர்வம் காட்டினான். இந்தியாவின் பிரதமர் ஆன ஜவஹர்லால் நேரு தான் மறைந்த பின்னர் தனக்கு மலர் மாலை வைக்க வேண்டாம். தன் மடியில் புத்தகங்களை வைக்க வேண்டும் என்றார்.

‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா..’ என்ற பழமொழிக்கு இணங்க சிறுவயதில் வாசிக்காதோர் வளர்ந்த பிறகு வாசிப்பாரா? இல்லை அவர் வாசிக்க மாட்டார் ஏனெனில் அவருக்கு சிறுவயதில் வாசிக்கும்



ஆற்றல் இல்லை வளர்ந்த பிறகு வாசிக்க மாட்டார். அது மட்டுமல்ல மகாத்மா காந்தி சிறையிலிருந்த தனது கடிதத்தில் தனக்கு நல்ல நூல்கள் வேண்டும் என்று நூல்களைத்தானே வாசித்தார். அது மட்டுமல்ல அறிவான விஞ்ஞானிகள், கவிஞர்கள் வாசிப்பதனாலேயே முன்னேறினார்கள். காந்தி, ஜவஹர்லால் நேரு, ஆபிரகாம் லிங்கன், தோமஸ் அல்வா எடிசன், சோக்கிரட்டீஸ் ஆவார். ‘கற்ற கசட கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக’ என்றார் வள்ளுவர்.


‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’ சிறுவயத்தில் வாசித்தால் அது எம்முடனே இருக்கும் நாம் மறைந்த பின்பு நம்முடனே மறையும். ஆனால் எமது வாசிப்பால் பலரும் நன்மையடைந்திருந்துபார். மேடைப் பேச்சு என்றாலே பயம் என்போர்க்கு வாசிப்பு பழக்கம் இல்லை அதுவே காரணம். இதற்கு காரணம் நவீன முறையிலான இணையத்தளம். இதனாலேயே மாணவர்கள் சீர்குலைகின்றனர். நாம் அன்றாடம் காணப்படும் செய்திகள், சஞ்சிகைகள், விளம்பரங்கள் என்பவற்றை வாசிக்கலாம்.

ஆனால் சில வீடுகளில் நேரம் இல்லையென எண்ணிபத்திரிகைவாசிப்பதைதள்ளிவிடுகின்றார்கள். நாம் வாசிக்கும் போது சிறுவர்களுக்கு தகுந்த பக்கங்களை வாசிக்க கொடுத்து அதை பெற்றோர் பெரியோர் நோட்டமிடவேண்டும். ஏனெனில் பத்திரிகை வாசிப்பதனால் நன்மையுண்டு. ஆனால் விளம்பரங்களில் சிறிதளவு தேவையற்ற விடயங்களும் உண்டு. சிசுவானது கருவில் இருக்கும் போது தாயானவர் வாசிக்க வேண்டும் என்பதை உளவியல் கூறுகின்றது.

வாசிப்பில் காணப்படும் செயற்பாடு ஆராய்தல், கிரகித்தல், கற்பனை செய்தல் என்பனவாகும். நாம் வாசிக்கும் இடமானது நூலகம், புத்தக சாலை, பாடசாலை என்பனவாகும். வாசிப்பதனால் கிடைக்கும் நன்மை வேலைகள் அலகுவாகும். பரீட்சையில் இலகுவாக இருக்கும், அறிவு வளரும். வாசிப்பு திறன் மேம்படும். அதனால் உலகலாவிய ரீதியில் வாசிப்பு தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. சில பெற்றோர் பாட சம்பந்தமாக கற்க வேண்டும் என எண்ணக்ககூடாது. பாட கல்வி திட்டத்திற்கு அமைய கவிதைகள், கட்டுரைகள் வாசிக்கலாம். ‘தலை குனிந்து வாசித்தால் தலை நிமிர்ந்து வாழ வைக்கும்’ ஒவ்வொரு நூலும் நல்ல நண்பர்கள். கண்டதும் கற்க பண்டிதன் ஆவான் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**சி.தர்மிகா,**
**அச்சுவேலி மத்திய கல்லூரி**



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 244

ஸ்ரீலங்கா, இந்தியா, அமெரிக்கா, கனடா உட்பட சர்வதேச நாடுகள் பல பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளை இணைத்து இருந்தன. அப்படி இருந்தும், அதைக் காரணமாக்கி தள்ளி வைக்காது, இனப் பிரச்சனைக்கு தீர்வு என்ற பேச்சுக்கு சர்வதேசம் அவர்களை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று சமாதான பேச்சுக்களை நடத்தினாலும், விடுதலைப் புலிகளின் முனைப்பில் ஒன்றிணைக்கப்பட்டு, அவர்களின் ஆதரவிலும், தேர்தலில் அவர்களுக்காக வெளிப்படையாக பிரச்சாரங்கள் மேற்கொண்டதினால் கூட்டமைப்பு அங்கத்தினர்கள் நாடாளுமன்ற பிரதிநிதிகளானார்கள். விடுதலைப் புலிகளின் முகவர்களாகவே அவர்கள் பார்க்கப்பட்டார்கள்.





பேராசிரியர் சாயஸ்

பேச்சு வார்த்தைகளை முறித்து மஹிந்த தான் போரை முன்னெடுக்க போகின்றார் எனவும், அது பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளிடம் இருந்து, வடக்கு – கிழக்கு மக்களை விடுவிப்பதற்காக என சிங்கள பேராண்மைகளை உசுப்பி விட்டார். கூட்டமைப்பினர் திராணி உள்ள அரசியல் நடத்தி இருந்தால், அவர்கள் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர், அவர்கள் தமிழ் மக்களின் பாதுகாவலர்கள், விடுதலை வீரர்கள், என எதிர்ப்பு வாதங்கள் வைத்து, வன்னியில் வெளியேறி இருந்த மக்களைத் திரட்டி போராட்டங்களை நடத்தி இருப்பார்கள்.

"தாங்கள் பயங்கரவாதத்துக்கு ஆதரவானவர்கள் அல்லர், பயங்கரவாதத்துக்கு எதிரான அரசாங்க நடவடிக்கையை எதிர்க்கவில்லை. ஆனால் பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது" என உப்புச் சப்பற்ற பேச்சுக்களையே தந்தார்கள்.

'சரியான அரசியலாக' பல புலம்பெயர் புத்திஜீவிகள் சம்பந்தனிடம் நடக்கப் போவது அழிவு, ஆதலால் அப்படியான எச்சரிக்கைகளை மஹிந்தவுக்குத் தந்து, கூட்டமைப்பின் பிரதிநிதிகள் யாவரும் இந்தியாவில் அரசியல் புகலிடம் கோரி, இந்தியாவிடம் நிலைமையை கட்டுப்படுத்த வேண்டுமென நேரடி பேச்சுக்களில் இறங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வைத்தார்கள். ஆனால் இவை நடத்தப்படவில்லை.

ஒன்றில் தங்களது வாழ்க்கை முறைகளை அறுத்து அரசியல் தஞ்சம் இருக்க அவர்கள் விரும்பவில்லை.

இரண்டாவது "இது பிரபா அறிந்து எடுத்த முடிவு. அவரே பார்த்துக் கொள்ள வேண்டும்" என்பதுதான்.

ஆனால் போரின் முடிவு காலங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாக (இந்தியா) சென்று, பின்னர் சேர்ந்து அரசியல் பேசத் திரும்பினார்கள்.

இப்பொழுது மஹிந்த "இந்த அரசியல் தலைமைகளையும், அவர்களது அரசியலையும் ஓரம் கட்டி நாங்கள் நடத்திய போர் பயங்கரவாதிகளுக்கு எதிரானது. அந்தப் போராட்டத்தின் விளைவாக ஏதாவது அழிவுகள் நடந்திருந்தால் அவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை அல்ல. அப்படி எண்ணப்பட்டதும் அல்ல. மக்களைப் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்பதற்கு அந்த முயற்சிகள் தவிர்க்க முடியாது ஏற்பட்டவை" என பிரச்சாரப்படுத்தி, நியாயப்படுத்தி, சர்வதேசங்களை சரிப்படுத்த, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைகுழுவை (Lesson learn and reconciliation commission) அறிக்கையையும் பெற்றுக் கொண்டு, 2012 – 2013 நடந்த மனித உரிமைகள் மன்றின் கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடுகளில் இருந்த காணிகளில் மீள்குடியேற்றங்கள் நடைபெறுகின்றன எனவும், சகஜ நிலைமை அங்கு திரும்புவதாகவும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டமை மட்டுமல்லாமல், எதுவிதமான விசாரணையும் நாட்டின் உள்ளே நடக்கலாம், வெளியாவது உள்ளீடுகள் தேவையற்றவை என்ற வாதமும் இன்றுவரை கடைபிடிக்கப்படுகிறது அதேசமயம் தமிழர் தரப்புகளின் அரசியலால் பேராண்மை போருக்குப் பின் நிலத்தில் எவ்வளவு முனைப்பு கொண்டு சதுராட்டம் ஆடுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஐ.நா மனித உரிமைகள் மன்றத்தில் தமிழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. மனச்சாட்சியில் நிற்கக்கூடிய சர்வதேச நாடுகளையும், புவியியல் அரசில் பிராந்தியத்தில் ஆதாயம் தேட விரும்புவோரையுமே தமிழ் மக்களுக்கு ஆதரவு தர எதிர்பார்க்கலாம். அவற்றை நம்பியே சமர்ப்பணங்களையும் கோரிக்கைகளையும் வைக்க வேண்டியுள்ளது. அந்த




ரூவாண்டா இனப்படுகொலைக் காட்சிகள்

நிலைமை 1987 க்கு முன் இருந்ததில்லை. தமிழர் தரப்புகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து இனப்படுகொலை என காணப்பட வேண்டும், அந்த தீர்மானத்தில் இடுசெய் நீதியில் தீர்வு தரப்பட வேண்டும் என்பது முக்கியமானது.

13 வருடங்களின் பின் உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் பதவிகளுக்காக நடக்கும் அடி பாடுகளும் புதிய புதிய கூட்டமைப்புகளும் மக்கள் இனப்படுகொலை என கதறும் நிலைப்பாடுகளான அரசியலையா சர்வதேசத்துக்கு தருகின்றன?

மஹிந்தவின் அணியில் சேர்ந்து போட்டியிட ஒரு பகுதி, மைத்திரியின் அணியோடு இன்னும் சிலர், சஜித்தோடு, ஜே.விப்பியோடு, சோசலிச முன்னணி என்பவை மட்டுமல்லாமல், அரக்கியாக, தமிழ் மக்களை சமாதானம் என்று கூறி



போர் நடத்தியவர் என அறம் பாடப்பட்ட சந்ததிகாவின் கட்சியில் ஒரு பகுதி என்றால், இவர்கள் யாபேரும் இனப்படுகொலைக்கு மாறாக தொடர்ந்து இணைந்து வாழலாம் என நினைக்கிறார்கள் என்று தானே சர்வதேசம் அபிப்பிராயப்படும்?

ஆகவே, 'சரியான அரசியல்' என்பது யாருக்கோ வால் பிடிப்பது அல்லது அடங்கி நடப்பதோ அல்ல. தாங்கள் கைகொள்ளும் அரசியல் கொள்கையை திடமாக பின்பற்ற வேண்டு. அடுத்த தரப்பை அவமதிப்பதாக அது அமையக் கூடாது எனவும் பொருள்படும். சர்வதேசங்களுக்கு இனப்படுகொலை என்றும் நாட்டில் இணக்கமான அரசியலும் என்ற நிலைப்பாடு அவமதிப்பாகும்.

நடந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வை ஒட்டி தெரியப்படுத்தப்படும் அபிப்பிராயங்களும் அவற்றின் முறைகள் பற்றியும் குறிப்பிட்டு இருந்தேன்.

அவை போக இனப்படுகொலையை ஒட்டி நடைபெற்ற – நடத்தப்படுகின்ற – அரசியல், அதனை சர்வதேச நடப்புகளில் அவ்வளவு தூரம் ஆணித்தரப்படுத்தும் என்று கூறி சரியான அரசியலை நடத்துபவர்களிடமே விட்டுவிடலாம்.

## இனப்படுகொலைக்கு உடந்தையானவர்கள்

மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் (Permanent Peoples' Tribunal) தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என தீர்ப்பளித்தமையையும் அதனைப் போலவே வேறு அரசு சார்பற்ற நிறுவனங்கள் கூட அபிப்பிராயம் தெரிவித்து இருப்பதும் இந்தக் கோரிக்கைக்கு புறநிலை சான்றுகளாக அமைந்தாலும், அதன் அடிப்படைகளில் பச்சாதாபாப் பார்வைகளோ நோக்கோ ஐ.நா. மட்டங்களில் எழுவது இல்லை என கலாநிதி சாயஸ் குறிப்பிட்டு இருந்தார்.

நடந்தது இனப்படுகொலை, உன்மத்தமாக நடத்தப்பட்டது என்பதை பயவ்ரா, ரூவாண்டா, சூடான், கம்போடியா போன்ற நாடுகளின் பின்னணிகளை அறிந்த மனசாட்சி உள்ள மனிதர்கள், நாடுகள் ஏற்றுக் கொள்வர்.

ஆனால் ஐ.நாவின் அரசியலுக்கு இடையே அது ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது வேறு விடயம். அதனை புரிந்து கொள்ள நடத்தப்பட்ட அரசியலையும் ஆராய்வுக்கு உள்ளாக்க வேண்டும். அதனை நாளை தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

## அனைத்து தரப்பினருக்கும் ...............................






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்படத்தில் நேற்று நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு சமயமும் தனது சமயத்தைப் பற்றி அனைவருக்கும் போதிக்க வேண்டும். ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும் போதிப்பதால் அவர்கள் எந்தவொரு சமயத்தினதும் எதிரிகள் ஆகிவிட மாட்டார்கள்.

சமயங்களும் பெரும் பிணக்குகளுக்கு முகம் கொடுத்துச் செல்கின்றன. இஸ்லாத்தில் மட்டுமல்ல. எதிர்காலம் என்றால் என்ன என்பது தொடர்பில் இஸ்லாத்திலும் பாரிய விவாதங்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

ஏனைய சமயங்களிலும் இந்நிலைமை காணப்படுகிறது. நீங்கள் கத்தோலிக்க தேவாலயங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே அருட்தந்தையின் போதனைகள் கத்தோலிக்க தேவாலயத்திலுள்ள பழமைவாத உறுப்பினர்களால் பெரிதும் சவாலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

அதேநேரம் இங்கிலாந்திலுள்ள தேவாலயங்களில் தற்போது ஆண் ஓரினச் சேர்க்கை திருமணங்களை அங்கீகரிப்பதா, அதனை எவ்வாறு நடத்துவது போன்ற விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

அனைத்து சமயங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. அது இந்து சமயமாக இருந்தாலும் சரி பௌத்த சமயமாக இருந்தாலும் சரி. அவை என்ன என்பது பற்றியே நாம் கலந்துரையாடி வருகின்றோம். எனவே, நாம் அனைவரும் அதற்கு முகம் கொடுத்துள்ளோம். எனினும், நாம் எமது அடிப்படை கொள்கையிலிருந்து விலகக்கூடாது.

இஸ்லாம், பௌத்தம், இந்து மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த நம் அனைவரும் எமது சமயத்தின் அடிப்படைகளை தேடும் கொள்கைகளில் குறியாக இருக்கவேண்டும். சமயம் வர்த்தகமயப்படுத்தப்பட்டிருப்பதாக நாம் உணருகின்றோம். போர்கள் உருவாகவும் சமயம் காரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எமது அதிகப்படியான நேரம் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவதிலேயே கழிந்துள்ளது. எனினும், தற்போது இது நல்லிணக்கத்துக்கான நேரமாகும்.

எனவேதான் நாம் தமிழர்களுடன் பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளோம். அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எவ்வாறு நல்லிணக்கத்துக்குப் பங்களிக்கப் போகின்றார்கள் என்பது பற்றி நாம் ஆராய்ந்தோம். முதற்படி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மூலமாக நாம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

மனோகணேசன் என்னை ஏன் உற்றுப் பார்க்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. மலையகத் தமிழர்களை சமூகத்துடன் ஒன்றிணைப்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம். அவர்கள் தாமதித்து வந்தாலும் அவர்களையும் சமூகத்துடன் நாம் ஒன்றிணைக்க வேண்டும்.

எமது சமூகத்தில் காலம் தாமதித்து பல இனங்களும் சமயங்களும் ஒன்றிணைக்கப்பட்டாலும் அவர்கள் அதற்குரிய பலனை அனுபவிக்கவில்லை. எனவே அவர்களும் முழுமையாக ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக முஸ்லிம் இனத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் நான் கலந்துரையாட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் திகன கலவரம், 2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் என்பன தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படுவதுடன் அதற்குக் காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பிலும் நாம் பேச வேண்டும்.

கொழும்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினையிலும் முற்றிலும் வேறுபட்ட பிரச்சினைகளையே இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள முஸ்லிம்களும் மன்னார் முஸ்லிம்களும் எதிர்நோக்குகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், சிங்களவர்கள் போன்று இவர்களிடமும் பேச்சு நடத்தி அவர்கள் எதிர்கொண்டுள்ள துன்பங்கள், சமூக பின்னடைவுகள் உள்ளிட்ட விடயங்களை வெளிக்கொணர வேண்டும். இது நல்லிணக்கம் தொடர்பான மூன்றாம் கட்ட நடவடிக்கையாக அமையும்.

அதேபோன்று சிங்களவர்களுடனும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். அதிலும் பல குழுக்கள் உள்ளன. சிலர் சாதி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேலும், பலரைச் சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. இதுபோன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே எனக்கு சமூக நீதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே, ஏனைய முஸ்லிம் குழுக்களுடனும் கலந்துரையாடி அவர்களுக்குள்ள பிரச்சினைகளை எமது மூன்றாம் கட்ட சந்திப்பின்போது எமக்கு அறியத்தருமாறு நான் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையைக் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் றிஸ்வியினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரையொன்றும் வெளியிடப்பட்டதுடன் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார அதனை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

சமய தலைவர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமால் குணரத்ன, பாகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பிரபா - மாத்தையாவைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, உங்கள் தந்தையான பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு திறைசேரி ஊடாக காசோலைகள் வழங்கப்பட்டன. அதற்கு நன்றிக் கடனாகவே தற்போது வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் உங்களுக்கு நிதி உதவி வழங்குகின்றார்கள். அதனை வைத்துத்தான் நீங்கள் இவ்வாறு பஸ்களை அன்பளிப்புச் செய்கின்றீர்கள் என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர் என்றார்.

இதற்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பதிலளிக்கையில், இரண்டாம் உலகப் போரில் பெயர்ட் பவர் என்பவர் ஹிட்லரின் படைகளுக்கும் முசோலினியின் படைகளுக்கும் ஆயுதங்களை வழங்கி உதவினார். இது ஒரே அணியிலுள்ளவர்களையும் பிளவுபடுத்தும் தந்திரம். அதேபோன்றுதான் விடுதலைப் புலிகள் அமைப்பில் அதன் தலைவர் பிரபாகரனோடு மாத்தையாவும் யோகியும் முரண்பட்டிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் சில உதவிகளை வழங்கி அவர்களை மேலும் பிளவடைய வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எனது தந்தை காசு கொடுத்தார் என்றால் 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவும் விடுதலைப்புலிகளுக்குக் காசு கொடுத்துத்தான் தேர்தலில் வெற்றி பெற்றார். – என்றார்.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமைகளை மீறிய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் காவல் மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் அரச புலனாய்வுப் பணிப்பாளர் ஆகியோர் பொறுப்பாளிகள் என இலங்கையின் உயர் நீதிமன்றம் கடந்த 12ஆம் திகதி தீர்ப்பளித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்க இலங்கை நிர்வாகம் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி உயர் நீதிமன்றத்தில் 11 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. நாடு முழுவதும் தேவாலயங்கள் மற்றும் விடுதிகளில் தொடர் குண்டுவெடிப்புகளில் 270இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதை அடுத்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், உண்மையைக் கண்டறியவும் நீதியை உறுதிப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீடுகளை வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளது.

எவ்வளவு இழப்பீடு கொடுத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களின் துன்பம் மற்றும் வலியை துடைக்க முடியாது. எனினும், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் இந்தத் தீர்ப்பு ஒரு முதல் படியாகும். உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றுக்கான அவர்களின் உரிமைகளுக்காகவும் போராடுகிறோம்" என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜெர்மி லோரன்ஸ் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய இழப்பீடு கிடைப்பதை உறுதி செய்யுமாறும், பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களது பிரதிநிதிகளுடனும் அது தொடர்பில் முழுமையாக கலந்தாலோசிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் பற்றிய முந்தைய விசாரணைகளின் முழுமையான கண்டுபிடிப்புகளை வெளியிடவும் லோரன்ஸ் வலியுறுத்தினார்..

"சர்வதேச உதவி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன், அரசாங்கம் ஒரு தொடர்ச்சியான சுயாதீன விசாரணையை நிறுவ வேண்டும். மேலும் பொறுப்பான அனைவரும் பொறுப்புக் கூறும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவுக்கு அமெ. பாராட்டு இலங்கைக்கு உதவியதற்காக

சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த நிதி வசதியை பெறுவதற்காக கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கைக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளமையை அமெரிக்க வரவேற்றுள்ளது.

அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதனைத் தெரிவித்தார்.

ஏனைய கடன் வழங்கியோரும் நியாயமாகவும் சமமாகவும் முன் வரும்போது இந்தியா வெளிப்படை தன்மையுடன் முன் வருவதை அமெரிக்கா வரவேற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய் சங்கர் இலங்கைக்கான தனது இரண்டு நாள்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக அமெரிக்காவின் இந்த வரவேற்பு வந்தது.

இலங்கைக்கு நான்காண்டுகளில் 2.9 பில்லியன் டொலர்களை இந்தியா வழங்க முன் வந்துள்ளதாக இந்திய நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்ற 16 ஆம் திகதி கடிதம் ஒன்றை இந்திய அயலுறவுத்துறை அமைச்சு எழுதியுள்ளது. இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி இதற்கான நிதியை வழங்குவதாக நிதி அமைச்சின் அதிகாரி ராஜ்குமார் மிஷ்ரா தெரிவித்துள்ளார்.

# வெண்ணெய் திரண்டு ........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்றே. பதிமூன்றுக்கு அப்பாலும் என்ற போர் முடிவுற்ற காலம் துவங்கிய தமிழர் கோரிக்கை குறித்தும் ரணில் யாழ் மண்ணிலிருந்து எதுவும் கூறிவிடவில்லை. அப்படியென்றால், அவர் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் புதிய தீர்வு செயல்படுத்தப்படும் என்று கூறுவது, பதிமூன்றின் முழு அதிகார செயல்திட்டம் குறித்தது மட்டும்தானா?

### மாறுபட்ட கருத்துக்கள்

இந்தப் பின்னணியில், இலங்கை வந்துள்ள இந்தியாவின் வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழர் தரப்பு ஒன்றாக, தலைநகர் கொழும்புவில் இன்று சந்திக்க இருக்கிறது என்று செய்தி வெளியாகியுள்ளது. இது, ரணில் அழைப்புவிடுத்த ஒரிஜினல் கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோரை உள்ளடக்கிய பேச்சுவார்த்தைக்கான நாடாளுமன்ற தமிழர் கட்சிகளுடனான முன்மாதிரியை ஒத்திருக்கிறது. என்னவென்றாலும், கடந்த ஓராண்டு காலத்தில், இவர்கள் அனைவருமே ஒன்றாகவும் தனியாகவும், அரசியல் தீர்விற்கு இந்தியாவை அணுகியிருந்தனர். இந்தியாவின் பங்களிப்பு தேவை என்றும் வலியுறுத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையில், ஜெய்சங்கர் பேசுவார் என்பதைவிட மற்றவர்களை பேசவிட்டு அவாகளின் கருத்துக்களை உள்வாங்கி கொள்வார் என்றே தோன்றுகிறது. அதில், தீர்வுத்திட்டம் குறித்தும், முன்னில் இருக்கும் தமிழ் தரப்பு முன்நிபந்தனைகள் குறித்து, தமிழர் தரப்பில் புதிதாக அல்லது ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்களை கூறுகிறார்களா, என்பதையும் உன்னிப்பாகக் கவனிப்பார் என்று கருதலாம்.

பேச்சுவார்த்தையில் இருந்து அவர் அறிந்துகொள்ளும் விடயங்கள் குறித்து, ஜெய்சங்கர், அரச தரப்பிடம் விளக்குவார் என்று எதிர்பார்க்கலாம். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, தமிழர் தரப்பு எத்துணை தீவிரமாக இருக்கிறார்கள், அதற்காக அவர்கள் தங்கள் பங்கிற்கு என்ன செய்யப்போகிறார்கள், அரசோடு ஒத்துழைப்பார்களா அல்லது, புலம்பெயர்ந்தோர் மற்றும் சர்வதேச அஜெண்டாக்களுக்குள் மீண்டும் ஒருமுறை சிக்கிக் கொள்ள விரும்புகிறார்களா, என்றும் மதிப்பீடு செய்வார் என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம்.

### வருந்ததக்க போராட்டம்

இதற்கிடையே, பொங்கல் விழா கொண்டாட்டங்களுக்காக யாழ்பாணம் வந்த ஜனாதிபதி ரணிலை எதிர்த்து பல்கலைகழக மாணவர்கள் மற்றும் வேறு சில அமைப்புகள் போராட்டம் நடத்தியது குறிப்பிடத்தக்கது. வருந்தத்தக்கது. காரணம், இனப்பிரச்சனை குறித்து, மக்களால் தோந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற கட்சி தலைமைகளுடன் ரணில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும்போது, அவரை எதிர்த்த தமிழர் போராட்டங்கள், அந்தப் பேச்சுவார்த்தைக்கும் எதிரானதே என்று அரசோ, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ கருதினால், அதன் விளைவுகளும் பக்கவிளைவுகளும் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முறியடிக்கும் விதமாகவே அமையும். அவ்வாறே கருதப்படும்.

அது போன்றே, இந்த போராட்டங்களில், வேலன் சுவாமிகள் கலந்து கொண்டதும், அவர் மதங்களுக்கு அப்பாலான இனப்போராட்டத்திற்கு, விரும்பியோ, விரும்பாமலோ, மதச்சாயம் பூசுகிறாரோ என்ற கேள்வியையும் சந்தேகத்தையும் எழுப்புகிறது. அவரை போன்றே, குறிப்பாக கிறிஸ்தவ மத பாதிரிகளும் மத போதகர்களும் இனப்பிரச்சினை குறித்து, தங்களை இணைத்துக் கொண்டது என்னவோ உண்மை. ஆனால், அந்த கால – நேர, நிலவரம் வேறு. தற்போதைய நிலவரம் வேறு.

தற்போது, ரணிலை எதிர்த்த போரட்டத்திற்காக கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் பிணையில் வெளியே வந்துள்ளார். இதுவே, அவரை சமூக தலைமை பொறுப்பிலிருந்து அரசியலுக்குள் தள்ளிவிடுவதற்கு வழி செய்யும் வாய்ப்புள்ளது. தற்போதைய அரசியல் தலைமைகளின் போக்கு பிடிக்காத, குறிப்பாக இளைய சமுதாயம் புதிய முகங்களைத் தேடுவதும் கருத்தில் கொள்ளப் படவேண்டும்.

ஆனால், வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக, தமிழர் அரசியல் வேறுபாடுகள் மற்றும் வேலன் சுவாமிகள் போன்று, தமிழ் சமூக – அரசியல் பரப்பில் புதியவர்கள் தோன்றி, பிறருடைய முயற்சிகளையும் போராட்டங்களையும் தனதாக்கிக்கொண்டு, அவற்றிக்கு பின்னாளில் உரிமை கோருவதும், அனைவரது கவனத்தையும் சிதறடிக்கும். அதன் காரணமாகவே, தமிழர் தரப்பு மீண்டும், மீண்டும் தவறுவிட்டு, பழைய குருடி கதவை திறடி என்ற நிலைமைக்கு தன்னை தானே தள்ளிக்கொள்ளும்.

இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்!

# மருத்துவ அதிகாரிகள் தெரிவித்த கருத்தால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் குழப்பம்!

மருத்துவர்கள் அமைப்பொன்று தெரிவித்த கருத்து காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சற்று முன்னர் பதற்ற நிலையேற்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் போரம் வெளியிட்ட ஊடக தகவல் காரணமாகவே பதற்றநிலையேற்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவரின் அலுவலகத்தை வைத்தியாசாலையின் சிற்றூழியர்கள் சுற்றிவளைத்துள்ளனர்.

அரசமருத்துவ அதிகாரிகள் போரத்தின் தலைவர் ஊடகங்களுக்கான அறிக்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர் என குற்றம்சாட்டியிருந்தார்.

# நாட்டை வந்தடைந்தது நிலக்கரி ஏற்றிய கப்பல்!

மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது.

சம்பிரதாயங்களை முடித்ததன் பின்னர் கப்பலிலுள்ள நிலக்கரியய இறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் மேலும் இரண்டு நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடைய உள்ளதாகவும் அந்த அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

# அலுபோமுல்ல விபத்தில் ஆறு பேருக்குக் காயம்!

பாணந்துறை – பண்டாரகம வீதியில் அலுபோமுல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக அலுபோமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டாரகமவில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த கார் வீடொன்றின் மதில் மற்றும் வாயிலில் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மூன்று யுவதிகளும், மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2023இல் வெளியிடப்பெற்றது.